முருகப்பெருமான் துணை

**மகான் மௌனச்சித்தர் அருளிய துல்லிய ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**08.04.2024**, திங்கட்கிழமை

1. தவசியே தன்னார்வத் தொண்டர்பலம்
   தரணியே அடைதல் வேண்டி
   அவதாரம் எடுத்து அருளுகின்ற
   அண்ணலே ஆறுமுக அரங்கனே
2. அரங்கனே உன் பெருமை கூறி
   அகிலமதில் சோபகிருது சேல் திங்கள்
   வரங்களென இருபானாற் திகதி சோமவாரம்
   (சோபகிருது வருடம் பங்குனி மாதம் 26 ம் நாள், 08.04.2024, திங்கட்கிழமை)
   வழங்குவேன் துல்லிய ஆசிதனை
3. ஆசிதனை மௌனச்சித்தர் யானும்
   அகிலம் நலம்பெற உரைப்பேன்
   வாசிவென்ற ஞானிகள் படை
   வரம்தந்து அரங்கனோடிருக்க
4. இருக்கவே கலிவாழ் மக்கள்
   ஏழாம்படை வீடு நோக்கிவர
   கருத்தாக அரங்கன் ஆசிபலத்துடன்
   கந்தப் பெருமான் ஆசியும் கிட்டி
5. கிட்டியே ஞானபலமுடன் சர்வமுமாய்
   குருவருளும் திருவருளும் கூடி நிற்பர்
   கட்டமான சகல சிக்கலும் வென்று
   கலியில் வரம்பல அடைந்துமே
6. அடைந்துமே காரிய வெற்றிகளும்
   ஆபத்தை வெல்லும் சக்தியும்
   தடையற சூட்சும சித்திகளும் கூடி
   தவராஜன் தொண்டர்களென ஆற்றல்
7. ஆற்றல் நிரம்பி மக்கள்
   அனைவரும் ஞானிகள் ஆவர்
   மாற்றம் உலகில் தரும்படி
   மாண்புகள் பெருக உலகோர்

8. உலகோர் ஞானிகள் எனும்
உயர்வான சக்திநிலை பெருகி
உலகினில் ஆன்மீக ஞான
உயர்வுதரும் அரசியல் களம்
9. களம்தனை உலகோர் கண்டு
கலியினில் ஞான ஆட்சிதரும்
களமாக மாற்றி அரங்கனின்
கட்டளையாக சேவை ஆற்றி
10. ஆற்றி உலகோர் அற்புதம்
அரசமாற்றமாகச் செய்து
ஏற்றமாக எங்கும் தெய்வ
இணையிலா ஞான ஆட்சியாக
11. ஆக உருவாகி பாதுகாப்பும்
அமைதி மகிழ்வு நிறைவும்
வகையாகக் கண்டு சிறப்பர்
வழங்கிய துல்லிய ஆசி முற்றே

—சுபம்—